சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.125/2020

19.08.2025

வா.சா.2 திரு.மணிகண்டன் , த/பெ. கணேசன்

**4 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 1980 ஆம் ஆண்டு பிறந்தேன். எனது பூர்வீகம் காட்டுமன்னார்குடி. தேதியூருக்கு எனது 5 வயதில் வந்தேன். தேதியூரில் நிரந்தரமாக வசிக்கிறேன் என்பதை காட்ட ஆதார் அட்டை உள்ளது. ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம் எதை வைத்து சொல்கிறேன் என்றால் விஏஒ-விடம் கேட்டதன் பேரில் சொல்லியுள்ளேன். நான் நாட்டாண்மையாக இருந்த போது நானும், சேகரும் சேர்ந்து சென்று கேட்டோம். தாவா சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண் 17, விஸ்தீரணம் 37 குழியாகும். சேகருக்கு 55 வயது இருக்கும். சேகரின் மூதாதையரை தெரியுமா என்றால் தெரியாது. சேகரின் மூதாதையரை எனக்கு தெரியாமல் வழக்கிற்காக முதல்விசாரணையில் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கை யார் யார் சேர்ந்து யார் யார் மீது போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆண்டாளுக்கு திருமணம் நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது சேகர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியமளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. சாட்சியமளிக்க சேகர் அழைத்ததன் பேரில் வந்தேன். எனக்கு வயது தற்போது 45 ஆகும். நான் தேதியூரில் கடந்த 7, 8 வருடங்களாக நாட்டாண்மையாக இருந்து வருகிறேன். கிராம நாட்டாண்மையை வருடா வருடம் கோவில் திருவிழா நடக்கும் போது மாற்றுவது வழக்கம் என்றால் சரிதான். சேகர் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்தை ஆக்ரமித்ததற்காக வழக்கு போட்டுள்ளார். சேகர் எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியவில்லை. தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் தெரியுமா என்றால் சர்வே எண் 17/33 ஆகும்.

பட்டா எண் தெரியாது. தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. கிராமத்து சார்பாக கண்ணுசாமிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள். எந்த வருடம் எழுதிக்கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிராம நாட்டாண்மை எழுதிக்கொடுத்தார், நாட்டாண்மை பெயர் தெரியாது. எந்த வகையான ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. சேகர் சொன்னதன் பேரில் ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சாட்சியமளிக்கிறேன். எனது தகப்பனார் உயிருடன் தான் உள்ளார். தாவா சொத்து சம்பந்தமாக முழுவிவரம் எனக்கு தெரியாது. எங்கள் கிராமத்தில் நாட்டாண்மையாக இருந்தவர்கள் மூத்த வயதினர் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். எனக்கு தெரிந்த விவரத்தை சொல்லலாம் என தான் சாட்சியமளிக்க வந்தேன். வாதிகள் 1 முதல் 3, 5, 6 பிரதிவாதிகளை தெரியுமா என்றால் 3 ஆம் பிரதிவாதி கோவிந்தராஜை தெரியாது. மேற்சொன்ன நபர்கள் அனைவரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் எங்கள் கிராமத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமசாமி கோமல் கிராமத்தை சேர்ந்தவர்தான். ராமசாமியை எனக்கு தெரியாது. ராமசாமி மனைவி ஆண்டாளை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாட்டாண்மை என்பதன் அடிப்படையில் கிராம திருவிழாவின் போது வரி வசூல் செய்வோம் என்றால் சரிதான். ஆனால் சேகர், சேகரின் வாரிசுகளிடம் வாங்கமாட்டோம். சேகர் குடும்பத்தை சேர்ந்தவர்களிடம் வாங்கமாட்டோம். தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக நான் பஞ்சாயத்து எதுவும் பேசவில்லை. பஞ்சாயத்து பேசியதாக என் தகப்பனார் சொல்லியுள்ளார். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக கிராம நாட்டாண்மை விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எழுதிக்கொடுத்ததாக ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். தாவா சொத்தில் மொத்தம் 5 வீடுகள் உள்ளது. 5 வீடுகளில் கூரை வீடு 2, மாடி வீடு 2, ஆஸ்புரோ சீட் போட்ட வீடு 1 உள்ளது. சேகர் கூரை வீட்டில் வசித்து வருகிறார். மாடி வீடு கட்டி 6 வருடங்கள் இருக்கும். எங்கள் ஊருக்கு அருகில் விஷ்ணுபுரம் என்ற கிராமம் உள்ளது என்றால் சரிதான். தேதியூருக்கும் விஷ்ணுபுரத்திற்கும் 1 1/2 கி.மீ தூரமிருக்கும். விஷ்ணுபுரத்தில் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். ராமசாமி

விஷ்ணுபுரம் பள்ளிக்கூடத்தில் படித்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக காவல்துறையில் விசாரித்துள்ளார்களா என்றால் விசாரித்துள்ளார்கள், எந்த வருடம் என்று தெரியவில்லை. கண்ணுசாமி என்பவரை தெரியும். 1 முதல் 3 பிரதிவாதிகளை 18, 20 வருடங்களாக தெரியும். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு நன்கு பழக்கமா என்றால் இல்லை, ஊர்கார்கள் என்ற முறையில் தெரியும். ரவிசங்கர், கோவிந்தராஜ் ஆக்ரமித்து வீடு கட்டியுள்ளதாக முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஊரில் உள்ளவர்கள் சொல்லிதான் தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக முழுவிவரமும் ஊரில் வயதானவர்களிடம் விசாரித்தால் மட்டுமே தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சேகர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனவே என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.